# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 85 — 1973 නොවැම්බර් 09 වැනි සිකුරාදා — 1973.11.09

85 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II அ) — விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் ... ... ... | 1185 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் ... | 1200 |


## பதவிகள் — வெற்றிடம்

### இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத் தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள்**

**1 : 1** விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். " இலங்கையர் " என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

**1 : 2** ஏதாவது ஒரு பதவிக்கான வேட்பாளர், அப் பதவிக்கு சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனினும் உயர்வான பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆகக் குறைந்த கல்வித் தகைமையென விதிக்கப்பட்டிருக்குமிடத்து, சிங்கள மொழி மூலம் கல்வி பயின்ற சிங்களவராக இருப்பின் அவர் சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (1961 ஜனவரி 1 க்கு முந்திய ஒரு திகதியிலிருந்து அரச சேவையில் இருப்போருக்கும் அரச சேவையில் உள்ள பிற பதவிகளுக்கு நியமனத்தை நாடும் அத் தகையோருக்கும் இத் தேவை ஏற்புடைத்தாகாது.)

**1 : 3** விதிக்கப்பெற்ற சிங்கள வினைத்திறமைத்திறன் தேர்வினில் சித்தி எய்தத் தவறியமைக்காக தகுதிகூர்/சோதனைக்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட "புதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் நியதிகளுக்கமைவாக விதிக்கப்பெற்ற உயர்ந்த சிங்கள வினைத்திறன் தேர்விலிருந்து விலக்களிக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கத்தக்க தகைமையை அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

**2. படிகள்**

**2 : 1** அரச சேவையில் உள்ள திருமணமான உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பதவிகளுக்கு ஏற்புடைய திரட்டிய மாத வேதனத்துடன் மேலதிகமாக தாபனக் கோவையின் vii ஆம் அத்தியாயத்தின் I ஆம் பிரிவில் தரப்பட்டபடி விவாகப் படியும் வழங்கப்படும்.

**2 : 2** மாத வேதனம் பெறும் அரச உத்தியோகத்தர்கள், அவர்கள் 180 ரூபாவிலிருந்து 250 ரூபா வரையில் (சகல படிகளும் உட்பட) வேதனமாக/கூலியாகப் பெறும் தொகுதியினரைச் சேர்ந்தவராகின், அவர்களுக்கு விசேட படியாக ரூபா 7.50 கொடுக்கப்படும். அது தேவையானவிடத்து சரிசெய்யப்படுவதற்கு உள்ளாகும்.

---

**முக்கிய அறிவித்தல்**

*இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.*

**3. சேவை நிபந்தனைகள் : பொது**

3 : 1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள், ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

3 : 2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

3 : 3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**4. நிரந்தரப் பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைத்தாகும் சேவை நிபந்தனைகள்**

4 : 1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :—

4 : 1 : 1 சகல நியமனங்களும், ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய, மூன்று வருடத்துக்குத் தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

4 : 1 : 2 அரசாங்க சேவையில் "புதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்கள் யாவரும் அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் செய் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தற்போதுள்ள எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு பயன் ஏற்படும் வண்ணம் இனிமேல் புகுத்தக்கூடிய சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமையுமாறு வேண்டப்படுவர்.

4 : 1 : 3 சகல அரச உத்தியோகத்தர்களும், தமது தகுதிகாண் காலத்தின்போது அரசகரும மொழியில் வேலை செய்யும் அறிவைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

4 : 1 : 4 தகுதிகாண் காலம் நிறைவு எய்தியபின்பு பதவியை உறுதி செய்வது, பிறவற்றுள் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முதலாவது வருடத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் இரண்டு வருடத்தினுள் இரண்டாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடத்தினுள் மூன்றாம் தரச் சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் தங்கியுள்ளது. ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம், விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும், அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 4 : 1 : 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும் அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

4 : 1 : 5 தகுதிகாண் நிலைக்கால முடிவு வரையில் சிங்கள மொழியில் விதிக்கப்பெற்ற வினைத்திறனை அடையாவிட்டால் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 12 : 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரயோகமாகும்.

4 : 1 : 6 சிங்கள மொழி மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் மீது 4 : 1 : 3 ஆம் 4 : 1 : 4 ஆம் 4 : 1 : 5 ஆம் பிரிவுகள் பிரயோகிக்கப்படமாட்டா.

4 : 1 : 7 அரச சேவையின், நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதி செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்கவேண்டியதில்லை.

4 : 1 : 8 தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அறிவதற்கு அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவ பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**5. நியமன நியதிகள்**

5 : 1 அரச சேவையில், நிரந்தரமான பதவிகளிலாயினும் மாதச் சம்பளமுள்ள தற்காலிக பதவிகளிலாயினும் 1.1.72 க்குப் பின்பு நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் (நாட் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள் நீங்கலாக) யாவரும் தமது திரட்டிய வேதனத்தின் 6 சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் நிதியாண்டின் இறுதியில் கொடுக்கப்படும் திரட்டு வேதனத்தின் 9 சத வீதத்தைக் கொடுத்துதவும். அத்தகைய பதவியை வகிப்பவர் (அவர் விரும்பினால்) அவரது மாதத்திரட்டு வேதனத்திலிருந்து 6 சத வீதம் வரையில் அவரது விருப்பப்படி, சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்தலாம். ஆனால் அத்தகைய உதவு தொகை மீது அரசாங்கம் எந்தவித தொகையும் செலுத்தாது.

5 : 2 1971.12.31 க்கு முன்பு அரச சேவையில் ஓய்வூதியமுள்ள நிரந்தரமான பதவிகளை வகித்த அரச உத்தியோகத்தர்கள் 1972.1.1 க்குப் பின்பு அச்சேவையில் உள்ள நிரந்தரமான பதவிகளில் நியமிக்கப்பட்டால் அவர்கள் அவர்களது ஓய்வூதிய உரிமைகளை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படுவார். அத்தகைய அரச உத்தியோகத்தர்கள் முன்பு போல விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

**6. யுத்த சேவைச் சலுகை**

6 : 1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப் படைகளில் சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை எனபனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள், அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காது

**விடின், 1939 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் உள்ள அச் சேவைக் காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன், அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருத்தல் வேண்டும்.**

**7. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்**

**7 : 1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.**

**7 : 2 வேட்பாளர்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.**

**7 : 3 ஒரு வேட்பாளரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய வேட்பாளரைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.**

**7 : 4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப் பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவு செய்யப்பட்ட பின்பு அப் பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.**

**7 : 5 விளம்பரத் தேவைகளுக்கு அமைவுபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

**8. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை**

**8 : 1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும்; அதில், பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.**

---

**கடற்றொழில் திணைக்களம்**

*ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகள்*

*கடற்றொழில் திணைக்களத்தில் நான்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவற்றுள், (1) கடற்றொழில் துறை உயிரியல் (விலங்கியல்/கடற்பாசி ஆய்வுத் துறை) (2) கடற்றொழில் துறை உயிரியற் செய்தி ஆயளவை தொடர்பாக, ஆராய்ச்சிகளையும் நுண்ணாய்வுகளையும் மேற்கொள்வர். கீழே தரப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு பின்வரும் தேதியன்று அல்லது அதற்கு முன்னர், செயலாளர், கடற்றொழில் அமைச்சு, காலிமுகம், த. பெ. இல. 1707, கொழும்பு 3 என்ற விலாசத்தை வந்தடைய வேண்டும்.*

*(அ) உள்ளூர் விண்ணப்பங்கள்—1973 திசெம்பர் 5*
*(ஆ) கடல்கடந்த விண்ணப்பங்கள்—1973 திசெம்பர் 5*

***குறிப்பு.**—(1) விணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறுமிடத்து அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனால் வரும் இடருக்கும் தாமே பொறுப்பாவர்.*

*(2) கடல்கடந்த அபேட்சகர்கள் அவர்கள் விரும்பினால், அந் நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதிகள் அலுவலகங்களில் இலங்கைக் கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு குறிப்பிட்ட தேதிக்குமுன் விண்ணப்பப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.*

*(3) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கைக் குடியரசின் கீழ் நியமனம் பெற வெளிநாட்டில் தேர்ந்தெடுக்கப்படும் இலங்கையரான உத்தியோகத்தர், சேவைக்கு உடற்றகுதி உடையவரென்பதை உறுதிப்படுத்தற் பொருட்டு, தம்மை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழில் செய்வோரால் சோதிக்கப்படுவதற்கு உடன்படுமாறு வேண்டப்படுவர். இத்தகைய சோதனைக்கான கட்டணமும், இலங்கைக்கு வருவதற்கு ஏற்படும் பிரயாணச் செலவும் உத்தியோகத்தராலேயே செலுத்தப்பட வேண்டும்.*

*2. **ஒப்பந்த நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.**—(1) பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் அற்றதுமாகும். நியமனம் 3 ஆண்டு காலத்துக்குத் தகுதிகாண் முறையில் இருக்கும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அரசாங்க சேவை சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தவேண்டும். எனினும், நிரந்தரமானதும், இளைபாற்றுச் சம்பளம் பெறுவதுமான பதவியிலுள்ள ஒரு உத்தியோகத்தர் தெரியப்படுமிடத்து, இப்புதிய பதவியிலும் தொடர்ந்து இளைப்பாற்றுச் சம்பளத்தைப் பெறும் வாய்ப்புடையவராவர். நியமனம் முதற்கண் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பதில் கடமையாற்ற வேண்டிய நிலையில் இருக்கும். பதவிக்குத் தகைமையற்றவரென அவர் காணப்படின் இப்பருவத்தின் எக்காலத்திலும் இவரின் முந்திய பதவிக்கு மாற்றப்படலாம்.*

*(2) கீழேயுள்ள 3 வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையைப் பெறும் பொருட்டு இவ்வுத்தியோகத்தர் வேலைக்கு அமர்த்தப்பட்டதும் வெளிநாட்டுக்கு அனுப்பப்படுவர்.*

*(3) உத்தியோகத்தர் வெளிநாட்டில் பயிற்சிக்காகத் தெரியப்படுமிடத்து, இலங்கைக் குடியரசுடன் ஓர் உடன்படிக்கை செய்ய வேண்டி ஏற்படும்.*

*(அ) ஏனையவற்றுடன், தனது பயிற்சியைப் பிரமாணிக்கத்துடனும் ஊக்கத்துடனும் கடைப்பிடித்து திருப்தியான முறையில் பூரணப்படுத்துவதாகவும், வேண்டப்படின், (பயிற்சி முடிவுற்றபின் இலங்கைக் குடியரசால் தீர்மானிக்கப்படும்) ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு இலங்கைக் குடியரசுக்குச் சேவை செய்வதாகவும் பொறுப்பேற்றதோடு,*

*(ஆ) உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகட்கும், விதிகட்கும் இயைய நடக்கத்தவறின், பயிற்சி நெறியின் முழுச் செலவையும், அதாவது, இலங்கைக் குடியரசாலோ அல்லது வேறு எந்த முகவராண்மையாலோ அல்லது அவ்வப் பகுதியின் கூட்டினாலுமோ இப்பயிற்சி நெறி முழுவதும் சம்பந்தமாகப் பொறுப்பேற்கப்பட்ட செலவை (அஃதாவது, சம்பளம், படி, பிரயாணச் செலவுகள், கட்டணங்கள், முதலியன) இலங்கைக் குடியரசுக்குத் திருப்பிக் கட்டவும் பொறுப்பேற்பதாக, இலங்கைக் குடியரசுடன் ஒரு உடன்படிக்கையில் ஈடுபடவேண்டும்.*

*3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்கான வழங்கப்படும் சம்பளத்திட்டம் வருமாறு :—ரூபா 7,400 இலிருந்து ரூபா 16,320 வரை செல்லும். ரூபா 360 வீதம் 10 ஆண்டுகளும், ரூபா 480 வீதம் 11 ஆண்டுகளும் சம்பள உயர்ச்சி வழங்கப்படுகையில் ரூபா 12,000 க்கும் ரூபா 14,800 க்கும் இடையில் வினைத்திறன்காண் தடையில் நிறுவப்படும். தெரியப்பட்ட அபேட்சகர் நியூபவுண்ட்லண்ட், சென்ற் ஜோன்ஸிலுள்ள மீன்பிடி, கப்பற் போக்குவரத்து, கடலக எந்திரவியல், இலத்திரனியல் கல்லூரியினால் அளிக்கப்படும் கப்பல் கட்டும் தொழில் நுட்பத் துறையில் 'டிப்ளோமா' தகைமையையோ அல்லது கடற்றொழில் அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டதும் அதற்குச் சமமான தகைமைகளைப் பெற்றாலொழிய ரூபா 11,520 க்கு மேல் வருடாந்தச் சம்பளமாகப் பெறத் தகுதியுடையவராகார்.*

குறிப்பு.—(1) புதிதாகச் சேர்க்கப்படுகையில் ஒரு உத்தியோகத்தர் அடிப்படை விஞ்ஞானப் பட்டத்திலும் தாழுயர்ந்த பீ. எச். டி. பட்டமோ அல்லது எம். எஸ்சி. பட்டமோ உடையவராயிருப்பின் ஆரம்ப வருடாந்தச் சம்பளம் ரூபா 8,520 ஆகவிருக்கும்.

(2) தெரியப்பட்ட அபேட்சகரின் தகைமையும், அனுபவமும் சம்பளச் சலுகைக்குப் பாத்திரமாயிருப்பின், தாபனப் பணிப்பாளரின் உசாவுதலுடன் அவர் அத்தகைய சம்பளத்தில் அமர்த்தப்படலாம்.

4. தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வருவனவற்றைத் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவவேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும், உடலுறுதியும் உள்ளவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) 1973 திசெம்பர் 5 ந் தேதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்குக் கூடாதவராயும் இருத்தல் வேண்டும்.

(இ) கீழ்க்காணும் பாடங்களில் விசேட பயிற்சிபெற்ற ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் முதலாந்தர அல்லது இரண்டாந்தர மாண்புப் பட்டதாரியாகவிருத்தல் வேண்டும் :—

(1) கடற்றொழில் துறை உயிரியலுக்கு—

(i) உயிரியலில் சிறப்புப் பட்டம் (மீனியல் நூல்) கடலக உயிரியல் பாடங்களைப் பயின்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அல்லது

(ii) தாவரவியலில் சிறப்புப் பட்டம் (கடற்பாசி) ஆய்வுத் துறையில் பயிற்சியுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(2) கடற்றொழில் துறை உயிரியற் செய்தி ஆயளவை—கணிதத்தில் விசேட பட்டம்.

(இறுதிப் பரீட்சைக்குத் தோற்றி பரீட்சை முடிவுக்காகக் காத்திருக்கும் அபேட்சகர்களும் விண்ணப்பிக்கலாம்).

5. கேட்கப்படும்பொழுது தனித்த அல்லது பின்வரும் எல்லாப் பத்திரங்களையும் சமர்ப்பிக்குமாறு அபேட்சகர் வேண்டப்படுவர் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு.கு.—ஞானஸ்நானச் சான்றிதழோ உதவி பெறும் பாடசாலைகளின் பிரமாணக் கோவைக்கோ வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(ஆ) உயர்ந்த கல்வி அல்லது பட்டச் சான்றிதழ்.

(இ) படிப்பு அதிபரிடமிருந்தோ, கல்லூரி விரிவுரையாளரிடமிருந்தோ, பேராசிரியரிடமிருந்தோ பெற்ற ஒன்று உள்ளடங்கிய இரண்டு நன்னடத்தைச் சான்றிதழ்கள்.

(ஈ) உயர் தொழிற்றகைமைச் சான்றிதழ் அல்லது தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ் அல்லது இரண்டும்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்து பெற்ற உயர்ந்த தேர்வுச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) விண்ணப்பப் படிவத்துடன் எச்சாதனமோ, சாதனங்களின் பிரதியோ இணைக்கப்படலாகாது.

(2) கேட்கப்படும்பொழுது சாதனங்களை வழங்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. இலங்கைக் குடியரசுச் சேவையிலுள்ள உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள் அவ்வத்திணைக்களத்தின் தலைவரினூடாக அனுப்பப்படல் வேண்டும். எனினும், அவர்கள் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை, கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு முடிவுறுந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அவரைச் சென்றடையுமாறு நேராக அனுப்பவேண்டும்.

7. விண்ணப்பங்களும், இது சார்ந்த தொடர்புகளும், கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்படவேண்டுமேயன்றி இவ்வமைச்சைச் சேர்ந்த எவ்வுத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பப்படலாகா.

8. இவ்வர்த்தமானியின் பகுதி I தொகுதி (II அ) இன் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கைக் குடியரசுச் சேவைப் பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளின் கவனத்தைக் கோருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

9. விண்ணப்பங்கள் முடிவுறும் திகதியிலிருந்து 3 வாரங்களுக்குள் விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமைப்பற்றி அபேட்சகருக்கு அறிவிக்கப்படும். ஒப்புதற் கடிதம் பெறுவிடின், கொழும்பு 3, காலிமுகத்திலுள்ள கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும்.

செயலாளர்,
கடற்றொழில் அமைச்சு.

கடற்றொழில் அமைச்சு,
த. பெ. இல. 1707,
காலிமுகம்,
கொழும்பு 3,
1973.10.30.

## கடற்றொழில் திணைக்களம்

### ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகள்

(குறிப்பு.—விண்ணப்பம் அனுப்பப்படும் அஞ்சலுறையில் இடப்பக்கத்து மேல் மூலையில் "ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" என எழுதிப் பதிவு அஞ்சலில், செயலாளர், கடற்றொழில் அமைச்சு, த. பெ. இல. 1707, காலிமுகம், கொழும்பு 3, என்ற முகவரிக்கு அதை அனுப்பவேண்டும்).

1. முழுப்பெயர் :————.

2. முகவரி :————.

3. பிறந்த திகதியும் இடமும் :————.
1973, திசெம்பர் 5 ல் வயது :— ஆண்டு :————. மாதம் :————. நாள் :————.

4. நாட்டினம் :————.

5. விவாகமானவரா, தனியாளா ? :————.

6. கல்வித் தகைமைகள் :————.

7. தொழிற்றுறைத் தகைமைகள் :————.

8. பாடசாலையை விட்டதிலிருந்து இதுவரை பார்த்த தொழிலும்/அல்லது பயிற்சியும் :————.
(தொழிலிலமர்ந்த திகதியும் விட்ட திகதியும், விடுவதற்கான காரணங்களும் குறிப்பிடவேண்டும்).

9. தற்போதைய வேலை :————.

10. நற்சான்றிதழ்கள் தந்தவர்களின் பெயர்களும் பதவிகளும் :————.

11. வேறு ஏதாவது தகைமைகள் :————.

12. விண்ணப்பிக்கப்பட்டிருக்கும் ஆராய்ச்சி, நுண்ணாய்வுப் பிரிவு :————.

விண்ணப்பத்தில் தந்த விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையுமென யான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கே தந்துள்ள விபரங்களுள் எவையாவது பொய்யானவையோ சரியற்றவையோவெனக் காணப்பட்டால் தெரிவுக்கு முன்னர் யான் தகைமை நீக்கத்துக்கு ஆட்படலாமென்றும் நியமனம் பெற்றபின் விபரச் சரியின்மை கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கு ஆட்படலாமென்றும் அறிந்துள்ளேன்.

————,
கையொப்பம்.

திகதி :————.

11-381—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

### கல்வி அமைச்சு

பகுதி நேர விரிவுரையாளர்க்கான பதவிகள்—கல்வி ஆண்டு 1974
அரசினர் கலைக் கைப்பணி கல்லூரி

அரசினர் கலைக் கைப்பணி கல்லூரியில் பின்வரும் பாடங்களைக் கற்பிப்பதற்கு பகுதிநேர விரிவுரையாளர்களுக்கான பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

| பாடம் | | மொழி |
|---|---|---|
| 1. மொழி | ... | சிங்களம் |
| 2. மொழி | ... | ஆங்கிலம் |
| 3. கணிதம் | ... | சிங்களம் |
| 4. சமூக அறிவியல் | ... | சிங்களம் |
| 5. வரைதல் | ... | சிங்களம் |
| 6. சிற்பம் | ... | சிங்களம் |
| 7. கிரபிக் | ... | சிங்களம் |
| 8. மட்பாண்டக் கலை | ... | சிங்களம் |
| 9. பிடைவை அச்சடித்தலும் பின்னலும் | ... | சிங்களம் |
| 10. சணல் வேலை | ... | சிங்களம் |
| 11. படப்பிடிப்பு | ... | சிங்களம் |

**வேலை நேரம்.**—கிழமை நாட்களில் மு. ப. 8.00 மணி தொடக்கம் பி. ப. 6.00 மணி வரையும் சனிக்கிழமைகளில் மு. ப. 8.00 மணி தொடக்கம் பி. ப. 3.30 வரையும் நடைபெறும்.

வேதனம்.—பகுதிநேர விரிவுரையாளர்களின் கல்வி, தொழிற் றகைமைகளுக்கேற்பவும் திறைசேரி அனுமதிபெற்ற பாடத்திட்டத் தரத்துக்குமேற்பவும் ஒரு மணித்தியாலத்துக்கு ரூ. 2.50 தொடக்கம் ரூ. 18.75 சதம் வரை வழங்கப்படும். படிப்பித்தல் அனுபவமுள்ள விண்ணப்பதாரிகளுக்கு விசேஷ கவனிப்புண்டு.

சேவை நிபந்தனைகள்.—நியமனங்கள் 1974 ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் வரையிலுமான கல்வியாண்டுக்கு உரியன. ஆயினும் அவ்வருடத்தில் எக்கட்டத்திலேனும் காரணமின்றி நியமனங்கள் இரத்துச்செய்யப்படலாம்.

அந்த வருடத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்ட பாடத்திட்டத்தைப் பூர்த்திசெய்வதற்குரிய பாடக்கிரமத்தை தவணை ஆரம்பிக்கு முன்பு பகுதிநேர விரிவுரையாளர்கள் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வருடத்தில் நிகழ்த்தப்பட்ட பிரிவுரைகள் அனுமதிக்கப்பட்ட பாடக்கிரமத்துக்கேற்ப அமையவேண்டும்.

வருட இறுதிப் பரீட்சை நடத்துவதற்கென வெளிப் பரிசோதகர்கள் நியமிக்கப்படும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய நேரங்களில், பகுதிநேர விரிவுரையாளர்கள் தவணைப் பரீட்சைகளையும் வருட இறுதிப்பரீட்சைகளையும் மேலதிக வேதனமின்றியே நடத்த ஆயத்தமாயிருக்க வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி.**—விண்ணப்பங்கள் யாவும் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரத்துக்கேற்ப இருபிரதிகளில் பதிவுத் தபால் மூலம் அதிபர், அரசினர் கலைக் கைப்பணிக் கல்லூரி, 46, ஹோடன் பிளேஸ், கொழும்பு 7 என்ற விலாசத்துக்கு 30.11.1973 க்கு அல்லது அதற்கு முன்னம் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

ஏ. ஜே. எஸ். குணவர்தன,
பிரதேச கல்விப் பணிப்பாளர்
கொழும்பு.

பிரதேசக் கல்விப் பணிப்பாளர் அலுவலகம்,
கொழும்பு 7.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

1. முழுப் பெயர் :————.
2. வயது :————.
3. சொந்த விலாசம் (தொலைபேசி இலக்கம்—இருப்பின்) :————.
4. உத்தியோக விலாசம் (தொலைபேசி இல.—இருப்பின்) :————.
5. உத்தியோகம் அல்லது தொழில் :————.
6. ஏனைய தொழில்—(இருப்பின்) :————.
7. கல்வித் தகைமைகள் (திகதியுடன்) :————.
8. தொழிற்றுறைத் தகைமைகள் (திகதியுடன்) :————.
9. சிங்கள மொழியில் வகுப்புப் போதனை செய்ய முடியும் அல்லது முடியாது :————.
10. படிப்பித்தல் அனுபவம்—இருப்பின் :————.
11. சாதனை அனுபவம்—இருப்பின் :————.
12. பகுதிநேர விரிவுரையாளராக நீர் படிப்பிக்க விரும்பும் பாடங்கள் :————.
13. ஒரு வாரத்தில் நிகழ்த்த முடியுமான மிகக்கூடிய விரிவுரைகளின் தொகை :————.
14. அரசினரின்கீழ் சேவை செய்கிறீரா ? அப்படியாயின் உத்தியோக அலுவலக நேரத்துக்குப் பின் விரிவுரைகள் நடத்த ஆயத்தமா :————.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

11-265—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

### தொல் பொருட்கலைத் திணைக்களம்

" ஓவசியர் " பதவிகள் 2 ம் தரம்

தொல்பொருட்கலைத் திணைக்களத்திலுள்ள " ஓவர்சியர் " 2 ம் தரம் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டு 1973.12.15 அல்லது அதற்கு முன்னதாகவோ எனக்கு கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும்.

2. சம்பள விகிதம்.—இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்த சம்பளம் விகிதம் 3,450—90×11—4,400 ஆகும்.

குறிப்பு.—(01.10.69 க்கு முன் இப் பதவிக்கான அடிப்படைச் சம்பள விகிதம் 1,320—72×11—2,112 ஆகும்.

3. **வேண்டிய தகைமைகள்.**—எவ்வொரு அபேட்சகரும் பின் வரும் தகைமைகள் பெற்றவர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும்.

1973.11.09 திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். வயதுமேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

நற்குணம் தேகாரோக்கியம் உடையவராய் இருத்தல் வேண்டும்.

(அ) சிரேட்ட தாரதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி அல்லது (ஆ) கல்விப் பொதுத் தாரதரப் பத்திர (சாதாரணதர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, கணிதம், சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் இவற்றுடன் சரித்திரம், பௌத்த மதம் அல்லது பூகோளம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி

(இ) கனிட்ட தொழில் நுட்ப கல்லூரி ஒன்றின் கனிட்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் (கட்டிட அமைப்பு) 3 வருட மாலை நேர வகுப்பில் சித்தி, அல்லது

(ஈ) கனிட்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் (கட்டிட அமைப்பு) 3 வருடகால பகுதி நேர வகுப்பில் சித்தி அல்லது தகுதியான தகைமைகள்.

4. அரசினர் சேவையிலுள்ள தகைமையுடைய அபேட்சகரின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளப்படும் இத்தகைய விண்ணப்பங்கள் விதிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் அவை உரிய பகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டனவென்று நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக் கொள்ளும்படி அப்பகுதித் தலைவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

5. அபேட்சகர்கள் தங்கள் விண்ணப்பத்துடன் பின் வரும் சாதனங்களின் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும் :—

(அ) பெற்ற அதி உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரமும் உயர் தொழிற் பத்திரமும்,

(ஆ) பிறப்புச் சான்றிதழ்,

(இ) சமீபத்தில் கிடைக்கப்பெற்ற ஒரு குணச்சான்றிதழ் இவைகள் திருப்பி அனுப்பி வைக்கப்படமாட்டாது).

6. விண்ணப்பங்களும், இது சம்பந்தமான ஏனைய அஞ்சல்களும் உத்தியோக பூர்வமாக ஆணையாளருக்கு விலாசமிடப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும். இந்தத் திணைக்களத்தில் உள்ள எந்த உத்தியோகத்தரதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படக் கூடாது.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம் (IIஅ) ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

ஆர். எச். டி சில்வா,
தொல்பொருட்கலை ஆணையாளர்.

தொல்பொருட்கலைத் திணைக்களம்,
சேர் மார்க்கஸ் பெர்னண்டோ ரேட்,
கொழும்பு 7.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

### "ஓவிசியர்" பதவிகள்—2 ம் தரம்

### தொல்பொருட்கலைத் திணைக்களம்

1. முழுப்பெயர் : (தெளிவான எழுத்துக்களில்) ————.
2. நிரந்தர அஞ்சல் விலாசம் :————.
3. (அ) பிறந்த திகதி :————.
   (ஆ) 1973.11.09 ம் திகதியன்று சரியான வயது :————.
4. இலங்கைப் பிரஜா உரிமைத் தகைமைகள் :————.
5. கல்வித் தகைமைகள் :————.
6. உயர் தொழில், தொழில் நுட்ப தகைமைகள் :————.
7. பாடசாலை விலகிய நாளிலிருந்து சேவை செய்த இடங்கள் : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதியளிக்கிறேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்பட்டால் தெரிவு செய்வதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் விலக்கப்படுவதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

11–341—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

எண் : பொ. நி. 7/136

## கல்வி அமைச்சு

### பல் தொழில்நுட்ப நிலையங்களில் மின்னெந்திரவியல் விரிவுரையாளர் தரம் II

கல்வி அமைச்சின் கீழுள்ள பல்தொழில்நுட்ப நிலையங்களில் மின்னெந்திரவியல் விரிவுரையாளர் தரம் II இற்கான பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, "செயலாளர், கல்வி அமைச்சு (பொது நிர்வாகக் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு 1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாகப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்புப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பல்தொழில் நுட்ப நிலையங்களில் மின்னெந்திரவியல் விரிவுரையாளர் தரம் II பதவி" என அடையாளமிடப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவிகள் நிரந்தரமானவை. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் உபகாரச் சம்பள உரித்துடைய பதவிகளை ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் வகிக்காவிடின் அ. சே. சே. நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் நியமனத்தின்போது அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் உபகாரச் சம்பள உரித்துடைய பதவி ஒன்றினை வகிப்பின் உபகாரச் சம்பள உரித்தை அவர் தொடர்ந்து அனுபவிப்பார். தெரிவு செய்யப்படும் அபேட்சகர், ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாவிடின், முதற்கண் மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார். நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவி ஒன்றினை அரசாங்கத்தின் கீழ் வகிக்கும் ஒருவர் தெரிவு செய்யப்படின் ஒரு வருட காலத்துக்கு அவர் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்.

**குறிப்பு.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் நாட்டின் எந்தப் பல்தொழினுட்ப நிலையத்திலும் சேவை செய்ய வேண்டியிருப்பர். தற்போது சிங்களம் போதனு மொழியாகவுள்ள பல்தொழினுட்ப நிலையங்களில் மட்டுமே வெற்றிடங்கள் உள.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—ரூ. 6,720—12/230—ரூ. 11,040 (**குறிப்பு.**—1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத் திட்டம் ரூ. 4,080—12/360—8,400/- ஆகும்)

**குறிப்பு.**—(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் பட்டம் பெற்ற எந்திரவியல் பட்டதாரிகள் அல்லது எம். எஸ். சி. அல்லது பி. எச். டி. போன்ற அங்கீகரித்த பட்டப்பின் தகைமைகளைக் கொண்டோர் வருடமொன்றுக்கு ரூ. 7,800 கொண்ட திரட்டிய தொடக்கச் சம்பளத்தில் நியமிக்கப்படத் தகுதியுடையர்.

(ii) பல்கலைக் கழகத்தில் அல்லது அதற்குச் சமமான ஒரு நிலையத்தில் 3 வருடக் கற்பித்தல் அனுபவமுள்ள பட்டதாரிகளும், திறைசேரியின் அனுமதியுடன் வருடமொன்றுக்கு ரூ. 7,800 கொண்ட திரட்டிய தொடக்கச் சம்பளத்தில் நியமிக்கப்படலாம். எலவே அரசாங்க சேவையிலிருக்கும் ஓர் அபேட்சகர் தெரிவு செய்யப்படுவாராயின், இலங்கை அரசாங்கத் தாபனக் கோவை அதிகாரம் VII இல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகட்கிணங்க, அவரது சம்பளம் தீர்மானிக்கப்படும்.

(iii) ஏ. எம். ஐ. சி. ஈ., ஏ. எம். ஐ. ஈ. ஈ. அல்லது ஏ. எம். ஐ. பொறிமுறை எந்திரவியல் (இலண்டன்) போன்ற பூரண தொழில் தகைமைகளையும் கொண்டிருக்கும் ஓர் அபேட்சகர் வருடமொன்றுக்கு ரூ. 9,960 கொண்ட திரட்டிய தொடக்கச் சம்பளத்தில் நியமிக்கப்படத் தகுதியுடையர். அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் எந்திரவியலில் பட்டம் பெற்ற II ஆந் தர விரிவுரையாளர்கள், தமது சம்பள அளவில் மீயுயர்வை அதாவது வருடமொன்றுக்கு ரூ. 11,040 ஐ (திரட்டிய தொகை) எய்தி, அச்சம்பளத்தில் ஒரு வருடம் சேவை செய்தால், அவர்கள் ரூ. 480 உடன் கூடிய வருடாந்த சம்பள உயர்வுடன், வருடமொன்றுக்கு ரூ. 13,440 கொண்ட திரட்டிய சம்பளத்தைத் தொடர்ந்து பெறத் தகுதியுடையர்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகள் பெற்றுள்ளாரெனத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த ஒழுக்கமும் உடல்நலமும் உடையவராயிருக்க வேண்டும்.

(ஆ) 30.11.1973 அன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும் (அரசாங்க சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு இவ்வயதுக்கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(இ) (1) (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் மின்னெந்திரவியல் பாடங்களைக் கொண்ட பி. எஸ். சி. எந்திரவியல் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) ஏ. எம். ஐ. ஈ. ஈ. பரீட்சையில் பகுதி I, II, III இல் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(இ) அதற்குச் சமமான அல்லது உயர்ந்த தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரிகள் சிங்களத்தில் நல்ல தொழிலறிவைக் கொண்டிருக்க வேண்டும். சிங்களத்தில் தேர்ச்சி பெற்றிராத விண்ணப்பதாரிகள் நியமனத் தேதியிலிருந்து 3 வருட காலத்தில் விதிக்கப்பட்ட தரத்தில் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டும்.

குறிப்பு.—கல்வி அமைச்சின் கீழுள்ள தொழினுட்ப நிறுவனங்களில் ஏலவே சேவையிலிருக்கும் தேவையான தகைமைகளுள்ள விண்ணப்ப தாரிகட்கும், பல்கலைக் கழகம் அல்லது அதையொத்த பதவியிலுள்ள வேறொரு நிறுவனத்தில் கற்பித்தல் அனுபவம் பெற்றிருக்கும் விண்ணப்ப தாரிகட்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுப் பத்திரம் (ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொண்ட பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச் சான்றிதழ்கள் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில்நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

குறிப்பு.—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படவேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும், அது விதிக்கப்பட்ட திகதிக்கு முன் உரிய திணைக்களத் தலைவரால் பெற்றிருக்கப்பட்டு, தாமதத்திற்குப் போதிய காரணம் காட்டி அதனை ஏற்றுக்கொள்ளுமாறு திணைக்களத் தலைவரால் சிபார்சு செய்யப்பட்டாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எனினும் விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் விண்ணப்பத்தின் பிரதி ஒன்றினை இவ்வமைச்சுக்கு, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன் அனுப்பவேண்டும்.

7. விண்ணப்பங்களேனும் விண்ணப்பங்கள் சம்பந்தமான கடிதங்களேனும் கல்வி அமைச்சின் செயலாளருடைய விலாசத்துக்கே அனுப்பப் படவேண்டும் ; இவ்வமைச்சிலுள்ள எவ்வுத்தியோகத்தரின் பெயருக்கும் இவை அனுப்பப்படலாகா.

8. இவ்வர்த்தமானியின் I ஆம் பகுதி, II அ ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளவையும் அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங் களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகிறது.

9. விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமை பற்றி அறிவிக்கப்படும்.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1973 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 29 ந் உ.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

எண் : பொ. நி. 7/136

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

($8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ அளவு அரைத்தாள்களில் தயாரிக்கப்பட வேண்டியது)

**கல்வி அமைச்சின் கீழுள்ள பல் தொழில்நுட்பக்கல்வி நிலையங்களில் மின்னெந்திரவியத் விரிவுரையாளர் தரம் II**

1. பெயர் (முதலெழுத்துக்களுடன்) : திரு/திருமதி/செல்வி : ————.
2. முழுப்பெயர் : ————.
3. உத்தியோக முகவரி : ————.
4. சொந்த முகவரி : ————.
5. (அ) இலங்கையரா ? : ————.
(ஆ) அங்ஙனமாயின், வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா ? : ————.
6. பிறந்த திகதி : — வருடம் : ————, மாதம் : ————, நாள் : ————.
7. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ளபடி சரியான வயது :—
வருடம் : ————, மாதம் : ————, நாள் : ————.
8. தற்போதய பதவி பற்றிய விபரங்கள் :—
(அ) பதவி : ————.
(ஆ) நிரந்தரமா தற்காலிகமா ? : ————.
(இ) உபகாரச் சம்பள உரித்துடையதா அற்றதா ? : ————.
(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா ? : ————.
(உ) திணைக்களம் : ————.
(ஊ) நிலையம்/வேலை இடம் : ————.
(எ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் : ————.
(ஏ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டத்திலான தற்போதய படி : ————.
9. கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் (சிங்களத்தில் பெற்றுள்ள தேர்ச்சி/தமிழில் பெற்றுள்ள தராதரப் பத்திர விபரங்கள் உட்பட) :—

| பரீட்சை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

10. உயர்தொழில் தகைமைகள் பற்றிய விபரங்கள் :—

| தராதரப் பத்திரம் | வழங்கியவர் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

11. பொதுக் கல்வி கற்ற நிலையங்கள் :—

| நிலையம் | வகுப்பு | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |

12. உயர்தொழில் கல்வி கற்ற நிலையங்கள் :—

| நிலையம் | பின்பற்றிய பயிற்சி நெறி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

13. முன்னைய நியமனங்கள் (காலவரன் ஒழுங்கில் சுருக்கமாகக் கொடுபடவேண்டியது) :—

| திணைக்களம் | நிலையம்/ வேலை இடம் | பதவி | நிரந்தரமா தற்காலிகமா | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |

14. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டதா ? : ————.
(அங்ஙனமாயின் விபரங்களைக் கொடுக்கவும்)

15. விண்ணப்பதாரி அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டவரா ? : ————.
(அங்ஙனமாயின் விபரங்கள் கொடுக்கவும்)

16. விண்ணப்பதாரி பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு ? : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி: ————.

11-343—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

எண் : பொ. நி. 7/135

**கல்வி அமைச்சு**

*பல தொழில்நுட்ப நிலையங்களில் தொழிற்படிப்பு விரிவுரையாளர் தரம் II*

கல்வி அமைச்சின் கீழுள்ள பல்தொழில்நுட்ப நிலையங்களில் தொழிற்படிப்பு விரிவுரையாளர் தரம் II இற்கான பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, " செயலாளர், கல்வி அமைச்சு (பொது நிர்வாகக் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு 1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடிய தாகப் பதிவுஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " பல்தொழில்நுட்ப நிலையங்களில் தொழிற்படிப்பு விரிவுரையாளர் தரம் II பதவி " என அடையாளமிடப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவிகள் நிரந்தரமானவை. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் உபகாரச் சம்பள உரித்துடைய பதவிகளை ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் வகிக்காவிடின் அ. சே. சே. நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் நியமனத்தின்போது அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் உபகாரச் சம்பள உரித்துடைய பதவி ஒன்றினை வகிப்பின் உபகாரச் சம்பள உரித்தை அவர் தொடர்ந்து அனுபவிப்பார். தெரிவு செய்யப்படும் அபேட்சகர், ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாவிடின், முதற்கண் மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார். நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவி ஒன்றினை அரசாங்கத்தின் கீழ் வகிக்கும் ஒருவர் தெரிவு செய்யப்படின் ஒரு வருட காலத்துக்கு அவர் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்.

**குறிப்பு.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் நாட்டின் எந்தப் பல்தொழினுட்ப நிலையத்திலும் சேவை செய்ய வேண்டியிருப்பர். தற்போது சிங்களம் போதனு மொழியாகவுள்ள பல்தொழினுட்ப நிலையங்களில் மட்டுமே வெற்றிடங்கள் உள.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் வருமாறு :—ரூ. 6,720—12/360—ரூ. 11,040.

**குறிப்பு.**—1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத் திட்டம் ரூ. 4,080—12/360—8,400 ஆகும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகள் பெற்றுள்ளாரெனத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த ஒழுக்கமும் உடல்நலமும் உடையவராக இருக்க வேண்டும் ;

(ஆ) 30.11.1973 அன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசாங்க சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது) ;

(இ) (1) (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தொழில் நிருவாகம் அல்லது முகாமையில் பட்டம் பெற்றிருக்க வேண்டும் ;

**அல்லது**

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் தொழில் நிருவாகமும் அல்லது முகாமையினை ஒரு பாடமாகக் கொண்ட பொருளியல் அல்லது வணிகத்தில் மாட்சிப் பட்டம் அல்லது சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருக்க வேண்டும் ; **அல்லது**

(இ) இலங்கை தொழினுட்பக் கல்லூரியில் வணிகத்தில் டிப்புளோமாப் பட்டம் பெற்றிருக்க வேண்டும் ; **அல்லது**

(ஈ) அதையொத்த அல்லது உயர்ந்த தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(2) (அ) 5 வருடங்கட்குக் குறையாத கற்பித்தல் அனுபவம் கொண்டிருக்கவேண்டும்.

**குறிப்பு.**—விண்ணப்பதாரிகள் பின்வரும் பாடங்களுள் ஆகக் குறைந்தது நான்கு பாடங்களையேனும் கற்பிக்கக்கூடிய வர்களாக இருக்க வேண்டும் :—

(1) தொழில் நிருவாகம், (2) முகாமை, (3) சந்தைப்படுத்தல், (4) பண முகாமை, (5) பொருளியல் (மூலகங்களும் நடைமுறையும்), (6) ஆளணி முகாமை, (7) அலுவலக முகாமை, (8) கைத்தொழில் தொடர்புகள், (9) போக்குவரத்துக் கோட்பாடுகள், (10) கப்பல் தொழிலும் ஏற்றுமதி நடைமுறையும், (11) புள்ளி விபரவியல்.

(ஈ) விண்ணப்பதாரிகள் சிங்களத்தில் நல்ல தொழிலறிவைக் கொண்டிருக்க வேண்டும். சிங்களத்தில் தேர்ச்சி பெற்றிராத விண்ணப்ப தாரிகள் நியமனத் தேதியிலிருந்து 3 வருட காலத்துள் விதிக்கப்பட்ட தரத்தில் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டும்.

**குறிப்பு.**—கல்வி அமைச்சின் கீழுள்ள தொழினுட்ப நிறுவனங்களில் ஏலவே சேவையிலிருக்கும் தேவையான தகைமைகளுள்ள விண்ணப்ப தாரிகட்கும், பல்கலைக் கழகம் அல்லது அதையொத்த பதவியினுள்ள வேறொரு நிறுவனத்தில் கற்பித்தல் அனுபவம் பெற்றிருக்கும் விண்ணப்ப தாரிகட்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும்.—

(அ) பிறப்புப் பதிவுப் பத்திரம் (ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா) ;

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம் ;

(இ) குணச் சான்றிதழ்கள் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும் ;

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில்நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும்பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும், அது விதிக்கப்பட்ட திகதிக்கு முன் உரிய திணைக்களத் தலைவரால் பெற்றிருக்கப்பட்டு, தாமதத்திற்குப் போதிய காரணம் காட்டி அதனை ஏற்றுக் கொள்ளுமாறு திணைக்களத் தலைவரால் சிபார்சு செய்யப்பட்டாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. எனினும் விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் விண்ணப்பத்தின் பிரதி ஒன்றினை இவ்வமைச்சுக்கு, விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன் அனுப்ப வேண்டும்.

7. விண்ணப்பங்களேனும் விண்ணப்பங்கள் சம்பந்தமான கடிதங்களேனும் கல்வி அமைச்சின் செயலாளருடைய விலாசத்துக்கே அனுப்பப்பட வேண்டும் ; இவ்வமைச்சிலுள்ள எவ்வுத்தியோகத்தரின் பெயருக்கும் இவை அனுப்பப்படலாகா.

8. இவ்வர்த்தமானியின் I ஆம் பகுதி, II(அ) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளவையும் அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகிறது.

9. விண்ணப்பங்கள் பெற்றுக் கொண்டமைபற்றி அறிவிக்கப்படும்.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1973 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 29 ந் த.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

எண் : பொ. நி. 7/135

## மாதிரி விண்ணப்பப் பத்திரம்

($8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ அளவு அரைத்தாள்களில் தயாரிக்கப்பட வேண்டியது)

### கல்வி அமைச்சின் கீழுள்ள பல் தொழில்நுட்பக் கல்வி நிலையங்களில் தொழிற்படிப்பு விரிவுரையாளர் தரம் II

1. பெயர் (முதலெழுத்துக்களுடன்) : திரு./திருமதி/செல்வி : ———.

2. முழுப்பெயர் : ———.

3. உத்தியோக முகவரி : ———.

4. சொந்த முகவரி : ———.

5. (அ) இலங்கையரா ? : ———.
(ஆ) அங்ஙனமாயின், வம்சாவழி காரணமாகவா/பதிவு காரணமாகவா ? : ———.

6. பிறந்த திகதி : ———, வருடம் : ———, மாதம் : ———, நாள் : ———.

7. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ளபடி சரியான வயது :—
வருடம் : ———, மாதம் : ———, நாள் : ———.

8. தற்போதைய பதவிபற்றிய விபரங்கள் :—
(அ) பதவி : ———.
(ஆ) நிரந்தரமா/தற்காலிகமா ? : ———.
(இ) உபகாரச் சம்பள உரித்துடையதா/அற்றதா ? : ———.
(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா ? : ———.
(உ) திணைக்களம் : ———.
(ஊ) நிலையம்/வேலை இடம் : ———.
(எ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் : ———.
(ஏ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டத்திலான தற்போதைய படி : ———.

9. கல்வித் தகைமைகள்பற்றிய விபரங்கள் (சிங்களத்தில் பெற்றுள்ள தேர்ச்சி/தமிழில் பெற்றுள்ள தராதரப் பத்திர விபரங்கள் உட்பட) :—

| பரீட்சை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

10. உயர்தொழில் தகைமைகள்பற்றிய விபரங்கள் :—

| தராதரப் பத்திரம் | வழங்கியவர் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

11. பொதுக் கல்வி கற்ற நிலையங்கள் :—

| நிலையம் | வகுப்பு | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |

12. உயர்தொழில் கல்வி கற்ற நிலையங்கள் :—

| நிலையம் | பின்பற்றிய பயிற்சி நெறி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

13. முன்னைய நியமனங்கள் (காலவரன் ஒழுங்கில் சுருக்கமாகக் கொடுபடவேண்டியது):—

| திணைக்களம் | நிலையம்/ வேலை இடம் | பதவி | நிரந்தரமா தற்காலிகமா | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |

14. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டதா ? : ————.
(அங்ஙனமாயின் விபரங்களைக் கொடுக்கவும்)

15. விண்ணப்பதாரி அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டவரா ? : ————.
(அங்ஙனமாயின் விபரங்கள் கொடுக்கவும்)

16. விண்ணப்பதாரி பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு ? : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

11-344—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

**கல்வித் திணைக்களம், குருநாகல்**

**கனிட்ட தொழில்நுட்ப நிலையம், குருணாகல்—புற போதனாசிரியர்** பதவிகள், 1974 ஆம் ஆண்டு

கல்வி அமைச்சின் கீழுள்ள குருணாகல் கனிட்ட தொழில்நுட்ப நிலையத்திலுள்ள புற போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், 1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக குருணாகல் கனிட்ட தொழில்நுட்ப நிலைய அதிபருக்கு அனுப்பப்பட வேண்டும். அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களில் தாம் பெற்றுள்ள கல்வி, தொழில்நுட்ப, உயர்தொழில் தகைமைகள், அனுபவம் ஆகியவை பற்றிய சகல விபரங்களையும் குறிப்பிட வேண்டும். வகுப்புகள் நடாத்தப்படும் போதனாமொழி ஒவ்வொரு தொகுதிப் பாடங்களுக்கு எதிரே கொடுபட்டுள்ளது. ஒவ்வொரு பாடம் தொடர்பிலும் புறம்பான விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும்.

**சிங்கள மொழிமூலம்**

1. சிங்கள மொழி
2. கணிதம்
3. வெப்பவியல், ஒளியியல், ஒலியியல்
4. மின்னியலும் காந்தவியலும்
5. கட்டட அமைப்பு
6. பிரயோக கணிதம்
7. வர்ணிகப் புவியியல்
8. வாணிக எண்கணிதம்
9. தட்டெழுத்து
10. சுருக்கெழுத்து
11. வாணிகவியல் மூலகங்கள்
12. கணக்குப் பதிவியல்
13. வாணிகவியலும் நிதியியலும்
14. கணக்கீடு
15. மின்கம்பி இணைத்தல் (அறிமுறை)
16. மின்கம்பி இணைத்தல் (செயல்முறை)
17. வானொலி பழுதுபார்த்தல் (அறிமுறை)
18. வானொலி பழுதுபார்த்தல் (செயல்முறை)
19. பொருத்துதல் (அறிமுறை)
20. பொருத்துதல் (செயல்முறை)
21. வேலைக்களப் பயிற்சி
22. அளத்தலும் மட்டம் பார்த்தலும்
23. குழாயொட்டல் (அறிமுறையும் செயல் முறையும்)
24. மின்-தொழில்நுட்பவியல்
25. வெப்பவியல் இயந்திரங்கள்
26. பொறிமுறை வரைதல்
27. சௌக்கிய எந்திரவியல்
28. சமூகக் கல்வி
29. கொள்முதல் விதிகள் (Costing Methods)
30. விற்பனைச் சாத்திரமும் விற்பனைப் பரிபாலனமும்

### ஆங்கில மொழிமூலம்

1. கணிதம்
2. பொறிமுறை வரைதல்
3. மின்-தொழில்நுட்பவியல்
4. பிரயோகப் பொறிமுறையியல்
5. பொருள்களும் அமைப்பும்
6. வெப்பவியல் இயந்திரங்கள்
7. ஆங்கில மொழி
8. தொழிற்சாலைச் செலவியல் கணக்குமுறை.

2. புற போதனாசிரியர்க்கான கட்டணங்கள் அவர்களின் தகைமை, அனுபவம், அவர்கள் படிப்பிக்க வேண்டப்படும் வகுப்புகள் ஆகியவற்றிற்கு அமைய ரூபா 5.00 தொடக்கம் ரூபா 15.00 வரை வேறுபடும்.

3. நியமனம் 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் அதே வருடம் டிசெம்பர் மாதம் வரையுள்ள காலத்துக்கான தாகும். அவசியம் ஏற்படின் சேவை முன்னரே நிறுத்தப்படலாம்.

4. வகுப்புகள் பி. ப. 4.30 மணி தொடக்கம் பி. ப. 7.30 மணி வரை நடைபெறும். விதிக்கப்பட்டுள்ள இந்நேரங்களில் கற்பிக்கக் கூடியவர்களின் விண்ணப்பங்கள் மாத்திரமே சீர்தூக்கப்படும்.

5. உள்ளகப் பரீட்சகர்கள் அல்லாதவர்கள் அமர்த்தப்படாத வருடாந்த, இடைமானி இறுதிப் பரீட்சைகளில் மேலதிக வேதனமின்றி அவர்களுடைய வகுப்புகளிலுள்ள மாணவர்களைப் புற போதனாசிரியர்கள் பரீட்சிக்க வேண்டும்.

6. அரசினர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் திணைக்களத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்கு முன் அதிபரால் பெற்றுக் கொள்ளப்படாத விண்ணப்பங்கள், அவை விதிக்கப்பட்ட திகதிக்கு முன் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டு தாமத்துக்கான தகுந்த காரணங்கள் காட்டப்பட்டாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. எப்பாடம் தொடர்பில் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளதென விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடுதல் மிக முக்கியமெனக் கவனிக்கவும்.

8. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறைக்கமையத் தயாரிக்கப்பட வேண்டும்.

பி. பி. இரத்னயக்க,
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்,
குருனாகல்.

பிரதேசக் கல்வி அலுவலகம்,
குருனாகல், 13-10-1973.

(மாதிரி விண்ணப்பப் படிவம்)

**புற போதனாசிரியர் பதவிக்கான விண்ணப்பம்—கனிட்ட தொழில்நுட்ப நிலையம், குருநாகல்**

பாடம் :———.

1. முழுப்பெயர் :———.
2. பெயர் (முதலெழுத்துக்களுடன்) :———.
3. அலுவலக முகவரி :———.
4. சொந்த முகவரி :———.
5. தற்போதய உத்தியோகம் :———.
6. தற்போது வகிக்கும் பதவி : அரசாங்கத்தின் கீழா, கூட்டுத் தாபனத்திலா, தனிப்பட்ட நிலையத்திலா :———.
7. பிறந்த திகதி (பிறப்புப் பதிவுச் சான்றிதழில் உள்ளபடி) : ———.
8. கல்வித் தகைமைகள் :———.
9. உயர்தொழில் தகைமைகள் :———.
10. அனுபவம் :———.
11. பால் (ஆண்/பெண்) :———.
12. தற்போதைய சம்பள அளவுத் திட்டமும் தற்போதைய சம்பளமும் :———.
13. கற்பிக்கக்கூடிய போதனாமொழி :———.

மேலே நான் கொடுத்துள்ள விபரங்கள் நான் அறிந்த வரையிலும் நம்புகின்றவரையிலும் சரியானவையென இத்தால் உறுதியளிக்கிறேன். இவ்விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது சரியற்றவை எனக் காணப்படின், தெரிவுக்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்துக்குப் பின்னராயின் சேவையிலிருந்து விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் எனவும் நான் அறிவேன்.

திகதி :———.

———,
விண்ணப்பதாரியின் ஒப்பம்.

11–288—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

### மரவேலை வடிவ அமைப்பாளர் பதவி

சிறு கைத்தொழிற்றிணைக்களத்திலுள்ள மரவேலை வடிவ அமைப்பாளர் பதவிக்கு இலங்கைக் குடிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க் காணப்படும் மாதிரிப் படிவத்தைப் போன்ற படிவத்திலமைந்த விண்ணப்பங்கள் 1973.11.30 ந் தேதியன்றோ அதன் முன்போ வந்தடையுமாறு சிறு கைத்தொழிற் பணிப்பாளர், சிறு கைத்தொழிற்றிணைக்களம், ஹேமாஸ் கட்டிடம், கொழும்பு 1 என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 6,024 லிலிருந்து ரூபா 144 ஐக் கொண்ட 4 சம்பள உயர்வுகளையும் ரூபா 180 ஐக் கொண்ட 8 வருடாந்தச் சம்பள உயர்வுகளையும் கொண்டு ஆண்டொன்றுக்கு ரூபா 8,040 வரை உயர்வதுடன் வினைத்திறமைகாண் தடை ரூபா 6,780 க்கும், ரூபா 7,500 க்கும் முன்பாகும்.

3. **நியமன நியதிகள்.**—(அ) பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்தற்றதுமாகும்.

(ஆ) தெரிந்தெடுக்கப்படும் வேட்பாளர் மூன்று வருடங்கட்குத் தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவார்.

(இ) அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவு தொகை செலுத்தப்பட வேண்டும்.

4. **வயதெல்லை.**—விண்ணப்பகாரர் 1973.11.30 ந் தேதியன்று 25 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். (இம்மேல்வயதெல்லை ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ளோர்க்கு ஏற்புடைத்தன்று)

5. **கல்வித் தகைமைகளும் மற்றைய தகைமைகளும்.**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும், தான்,—

(அ) சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையிலோ அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையிற் சிங்களம்—தமிழ், எண்கணிதம்—கணிதம் உட்பட ஆறு பாடங்களில் இரு தடவைகட்கு மேற்படாது தோற்றியோ, அல்லது அதற்குச் சமனான அல்லது உயர்வான பரீட்சையிலோ சித்தியெய்தியுள்ளாயெனவும்,

(ஆ) மரவேலையிற் தொழினுட்ப ஆசிரியர் தராதரப் பத்திரம், அல்லது சிறு கைத்தொழிற்றிணைக்களத்தின் வெலோனு, பொறிமுறை மரவேலைப் பயிற்சி நிலையத்தின் இருவருட நெறியை முடித்தபின் பெற்ற சான்றிதழ், அல்லது ஓர் அங்கீகரிக்கப்பட்ட தொழினுட்ப நிறுவனத்தில் மரவேலையில் இரண்டு வருடங்கட்குக் குறையாத முழுநேர நெறியை முடித்துப் பெறப்பட்ட சான்றிதழ் பெற்றுள்ளாரெனவும்,

(இ) அலுவலகத் தளபாடங்கட்கும், வீட்டுத் தளபாடங்கட்கும் வடிவ அமைப்புச் செய்வதிற் குறைந்தது மூன்று வருட அனுபவம் பெற்றுள்ளாரெனவும்,

(ஈ) மிகச் சிறந்த குணப்பண்பும், உடனலமுள்ளவரெனவும் திருப்திகரமான சான்று சமர்ப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு.**—சிறு கைத்தொழிற்றிணைக்களத்தில் உள்ள மரவேலைச் செய்முறை காட்டுநர்—மேற்பார்வையாளர் போன்ற உத்தியோகத்தர்களின் விடயத்தில் மரவேலையை உள்ளடக்கிய பதவியொன்றிற் குறைந்தது 10 வருட அனுபவத்துடனிருப்பின் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிற் சித்தியடைந்துள்ளமை போதுமானதாகும்.

6. விண்ணப்பகாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் கீழ்க் காணும் சான்றிதழ்களின் படிகளை இணைத்தல் வேண்டும். அப்படி கள் திருப்பிக்கொடுக்கப்பட மாட்டா :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ;
கவனிக்கவும்.—ஞானதீட்சைச் சான்றிதழ்களோ அன்றி உதவி பெறும் பாடசாலைகளின் பிரமாணச் சட்டக் கோவையின் நோக்கத்திற்கிணங்க வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ் களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.)

(ஆ) மிகவுயர்ந்த கல்வித் தகைமைச் சான்றிழ் ;

(இ) தொழின்முறைத் தகைமை அல்லது தொழினுட்பத் தகை மைச் சான்றிழ் அல்லது இவையிரண்டும் ;

(ஈ) மிக அண்மைக்காலத்துக் குணநலச் சான்றிழ்கள் மூன்று.

(குறிப்பு.—வேண்டப்படும்போது மேற்குறிப்பிட்டுள்ள சான்றி தழ்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்கத் தவறும் வேட் பாளர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற்கெடுக்கப்பட மாட்டா)

7. அரசாங்க சேவையிலோ, உள்ளூராட்சிச் சேவையிலோ கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தந் திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்பட வேண்டும்.

8. கொழும்பில் நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சையொன் றிற்கு விண்ணப்பகாரர்கள் தமது சொந்தச் செலவிலேயே சமூக மளித்தல் வேண்டும்.

9. விண்ணப்பத்திற் கொடுக்கப்பட்ட விபரங்கள் சரியற்றவை யெனத் தெரிவுக்கு முன்காணப்படின் விண்ணப்பகாரர் தகைமை யற்றவராகக் கருதப்படுவதுடன் தெரிவுக்குப் பின்பாயின் அவர் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவார்.

10. வர்த்தமானியின் பகுதி I பிரிவு (IIஅ) ன் முற்பகுதியில் வெளியிடப்பட்டுள்ள அரசசேவைப் பதவிகட்காய நியமனங்கட்கு ஏற்புடைய பொது நிபந்தனைகட்குத் தங்கள் கவனம் ஈர்க்கப்படு கிறது.

ஜி. பி. கத்தொட்டுவ,
பிரதிப்பணிப்பாளர் (முகாமை),
சிறுகைத்தொழிற் பணிப்பாளருக்காக.

சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973, அக்டோபர் 16.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**மரவேலை வடிவ அமைப்பாளர் பதவி**
சிறு கைத்தொழிற்றிணைக்களம்

(கவனிக்கவும்.—விண்ணப்பத்தைத் தாங்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "மரவேலை வடிவ அமைப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிக்கப்பட வேண்டும்)

1. முழுப் பெயர் :————.

2. முகவரி :————.

3 பிறந்த திகதியும் இடமும் :————.

4. நாட்டினம் :————.

5. மணமானவரா, தனியாளா ? :————.

6. கல்வித் தகைமைகளும் தொழினுட்பத் தகைமைகளும் அல் லது இவற்றிலொன்று :————.

7. கல்விக் கூடத்தை விட்டு விலகியதிலிருந்து செய்த தொழில் அல்லது பெற்ற பயிற்சிகளின் அல்லது இவையிரண்டின தும் விபரங்கள் :————.

8. அரசாங்கத் திணைக்களமொன்றிலோ, கூட்டுத்தாபனமொன் றிலோ கடமையாற்றியிருப்பின் தொழிலை நிறுத்தியதற் கான காரணங்கள் கூறப்பட வேண்டும் :————.

9. எப்பொழுதாவது குற்றவியற்றவறெதற்காகவேனும் ஓர் நீதி மன்றத்திற் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் அக்குற் றத்தினதும் தண்டனையினதும் விபரங்களைக் குறிப்பிட வும் :————.

10. குணச் சான்றிதழ்கள் பெறப்பட்ட மூவரின் பெயர்களும் பதவிப் பெயர்களும் :—
1.
2.
3.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

11–253—09. 11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

**இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், 267, யூனியன் பிளேஸ், கொழும்பு-2**

வைத்திய அதிகாரிப் பதவி

இக்கூட்டுத்தாபனத்தில் வைத்திய அதிகாரிப் பதவிக்கு என இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின் றன.

1. தராதரம்.—ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்து டன் எம். பி. பி. எஸ். (இலங்கை அல்லது இலண்டன்) அல்லது அதற்கொப்பான தராதரம்.

2. வயது.—1973, நவம்பர் 15 இல் 45 வயதிற்கு மேற்படுதலா காது.

3. சம்பள விகிதம்.—ரூ 1,300—50—1,800/- (எல்லாமுட்பட) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரருக்கு அவ்ரின் தராதரங்களை யும் அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு, தகுந்த சம்பளம் வழங்கப்படலாம்.

4. கடமைகளும் பணிகளும்.—கூட்டுத்தாபனத்தின் வைத்தியப் பிரிவிற்கு அதன் ஊழியர்களின் மேற்பார்வையுட்படப் பொறுப் பாயிருத்தல் ; கூட்டுத்தாபன ஊழியர்களைப் பரிசோதித்து, மருந்து குறிப்பிடுதல் ; காப்புறுதிப் பிரேரிப்பாளர், உரிமைக் கோரிக்கையாளர்கள் முதலியோரை, ஆயுட்காப்புறுதிப் பகுதி, சட்டத்துறைப் பகுதி, தொழிலாளர் நட்டஈட்டுப் பகுதி, பலவினக் காப்புறுதிப் பகுதி முதலிய பகுதிகளுக்காக பரிசோதனை செய் தல் ; வைத்தியத்திட்ட உரிமைக் கோரிக்கைக் குழு, உரிமைக் கோரிக்கைக்குழு உட்படக் கூட்டுத்தாபனத்திற்கும் அதன் குழுக் களுக்கும், வைத்திய அபிப்பிராயம் தேவைப்படுமிடத்து, ஆலோ சனை வழங்குதல்.

விண்ணப்பதாரரைப் பற்றி நன்கு அறிந்த இருவரின் பெயர்கள் உட்பட பூரண விவரங்களுமடங்கிய விண்ணப்பங்கள் 1973.11.15 ஆம் தேதியன்றோ அதற்கு முன்னரோ எமக்குக் கிடைக்கக் கூடி யவாறு, பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

அரசாங்க சேவையில் அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனத்தில் உள்ள விண்ணப்பதாரர், தமது விண்ணப்பத்தை தமது திணைக் கள/கூட்டுத்தாபனத் தலைவர் மூலமாக, இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுமிடத்து, அவரை விடுவிக்கமுடியுமோ என்ற விவரத் தைத் திணைக்கள/கூட்டுத்தாபனத் தலைவரிடமிருந்து பெற்று அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்.

11–366—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

கல்வி அமைச்சு

மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் அரசாங்க தமிழ் மொழி மூல கஷ்ட பிரதேச பாடசாலைகட்கு தராதரப் பத்திரமற்ற ஆசிரியர் பதவிக்கான ஆட்சேர்ப்பு

மேற்படி விடயம் சம்பந்தமாக 1973 ஒக்டோபர் 19 ஆந் திகதியும் 82 ஆம் இலக்கமும் கொண்ட இலங்கைக் குடியரசின் வர்த்தமா னப் பத்திரிகையில் சிங்களத்தில் வெளியிடப்பட்ட விளம்பரத் தின்பால் உங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அச் சிங்கள விளம்பரத்தில் அடங்கிய மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் "மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் அரசாங்க தமிழ் மொழி மூலக் கஷ்ட பிரதேசப் பாடசாலைகட்கு தராதரப் பத்திரமற்ற சிங்கள உதவி ஆசிரியர் பதவி" என காட்டப்பட்டி ருக்கும் தலையங்கத்தை "மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் அரசாங்க தமிழ் மொழி மூல கஷ்ட பிரதேச பாடசாலைகட்கு தரா தரப்பத்திரமற்ற உதவி ஆசிரியர் பதவிகள்" என திருத்தப்பட வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

பீ. உடகம,
கல்வி அமைச்சின் செயலாளரும்,
கல்வி மா அதிபரும்.

1973 ஒக்டோபர் 30 ம் திகதி,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2.

11–376—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

**கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிலையம்**

**தகவல்/வெளியீட்டு உத்தியோகத்தர் பதவிகள் (தமிழ) தரம் I, II,**

**நிகழ்ச்சிமுறை உத்தியோகத்தர் பதவி**

**கட்புலத் துணை தொழில் நுட்பவலர் பதவிகள் தரம் I, II**

இந்நிலையத்தின் மேற்படி பதவிகளுக்கு, இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந் நிலையத்தில் பெறக்கூடிய விண்ணப்பப்படிவத்தில் (நேரிலோ அல்லது முகவரியுடன் கூடிய முத்திரையொட்டப்பட்ட தபால் உறையை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்) தயாரிக்கப்பட்டு, தேவையான சாதனங்களுடன், 1973, நவம்பர் 28 ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக, பனிப்பாளர், கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிலையம், 33, எலி பாங்க் வீதி, கொழும்பு 5 என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பப்படல்வேண்டும்.

**தகவல்/வெளியீட்டு உத்தியோகத்தர் பதவி (தமிழ்) — தரம் I**

**தகுதியும், அனுபவமும் :**

(1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின், தமிழை ஒரு பாடமாகக் கொண்ட பட்டதாரியாவும், க. பொ. த. (சாதாரணதரப்) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி பெற்றவராயுமிருத்தல் வேண்டும் ;

(2) சிங்களத்திலிருந்து/ஆங்கிலத்திலிருந்து, தமிழுக்கும், மறுவழியும் (அதாவது தமிழிலிருந்து சிங்களத்திற்கு/ஆங்கிலத்திற்கு) மொழி பெயர்க்கும் ஆற்றல் அவசியம் வேண்டற்பாலது ;

(3) கமத்தொழில் பிரச்சினைகள் பற்றிய அறிவும், கமநலத்துறையில் அனுபவமும் மேலதிகத் தகைமைகளாகக் கணிக்கப்படும் ;

தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர், நிலையத்தின் தொடர்பு ஆய்வு விடயங்களிலும், நிலையச் சஞ்சிகைகளை சிங்கள/தமிழ்/ஆங்கில மொழிகளில் தயாரித்து வெளியிடுவதற்கும் துணைபுரியுமாறு வேண்டப்படுவார்.

**வயது.**—விண்ணப்ப முடிவுத்திகதியன்று 22 முதல் 35 வயதுவரை. அரசாங்க யாக்கச் சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயது மேலெல்லை அமைவுடையதன்று.

**வேதனம்.**—சகலமுமுட்பட மாதமொன்றுக்கு :

ரூபா 650 — 10 × 30 + 5 × 45 — ரூபா 1,175

உயர்ந்த தகைமையும், அனுபவமுமுள்ள விண்ணப்பகாரர் மேற்குறித்த வேதன அளவுத்திட்டத்தில், அவர்தம் தகுதிக்கேற்ற வேதன நிலையில் நியமனமளிக்கப்பெறலாம்.

**தகவல்/வெளியீட்டு உத்தியோகத்தர் பதவி (தமிழ்)—தரம் II**

**தகுதியும், அனுபவமும் :**

1. (அ) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் தமிழ்ப் பாஷையுட்பட, 4 பாடங்களில் சித்தியும், அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் இடை நிலைப் பரீட்சையில் தமிழ்ப் பாஷையுடன் சித்தியும் ;

(ஆ) க. பொ. த. (சாதாரணதரப்) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தியும், அத்துடன் ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட தாபனமொன்றில் தகவல்/வெளியீட்டுப் பிரிவில் ஆகக் குறைந்தது, 5 வருட கால அனுபவம் ;

அல்லது,

2. (அ) க.பொ.த. (சாதாரணதரப்) பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாமல், எண்கணிதம்/கணிதம் பாடமுட்பட 6 பாடங்களில் சித்தி. இவற்றுள் தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உட்பட 4 திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன்

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட தாபனமொன்றில் தகவல்/வெளியீட்டுப்பிரிவில் 10 வருடகால அனுபவம்.

கமத்தொழில் பிரச்சினைகள் பற்றிய அறிவும், கமநலத் துறையில் அனுபவமும் மேலதிகத் தகைமைகளாகக் கணிக்கப்படும்.

**வயது** : விண்ணப்ப முடிவுத்திகதியன்று 22 முதல் 35 வயதுவரை அரசாங்க/யாக்கச் சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயது மேலெல்லை அமைவுடையதன்று .

**வேதனம்.**—சகலமுமுட்பட மாதமொன்றிற்கு :

ரூபா 570 — 9 × 20 + 6 × 25 — ரூபா 900.

உயர்ந்த தகைமையும், அனுபவமுமுள்ள விண்ணப்பகாரர் மேற்குறித்த வேதன அளவுத்திட்டத்தில், அவர்தம் தகுதிக்கேற்ற வேதன நிலையில் நியமனமளிக்கப்பெறலாம்.

**நிகழ்ச்சிமுறை உத்தியோகத்தர் பதவி**

**தகுதியும், அனுபவமும் :**

சி. பா. த. ப., க. பொ. த. (சாதாரணதரப்) பரீட்சையில் ஒரே தடவையில், கணிதம் உட்பட குறைந்தது, 4 திறமைச் சித்தியுடன், 6 பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

அத்துடன், அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிலையத்தின், படவரைதல் அறிஞர் ஒருவருட முழுநேரப்பயிற்சி நெறி அல்லது கட்டட கட்டுமான, படவரை அறிஞர் 3 வருடப்பகுதிநேர, பயிற்சி நெறி பரீட்சையில் அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

அதிகாரமளிக்கப்பெற்ற படவரை அறிஞருக்காக, அளவையாளர் அதிபதியினால் வழங்கப்படும் சான்றிதழ் வைத்திருப்பதும், க. பொ. த. (சாதாரணதரப்) பரீட்சையில், கேத்திரகணித பொறி வரைதல், சித்திரம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருப்பதும் ஒரு மேலதிகத் தகைமையாகக் கணிக்கப்படும்.

நிகழ்ச்சிமுறை உத்தியோகத்தரின் கடமைகள்—விரிவுரைகள், கருத்தரங்குகள், கல்வி நெறிகள், வெளியீடுகள் ஆகியவற்றிற்கும், கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிலையத்தின் முன்னேற்றக் கட்டுப்பாட்டு அறைக்கும், அட்டவணை, விளக்கப்படம், தேசப்படம், மாதிரிப்படம் முதலியவை தயாரிப்பதை உள்ளடக்கும்.

விண்ணப்பகாரர், அரசாங்கத் திணைக்களம்/யாக்கம் அல்லது வர்த்தக தாபனம் ஒன்றில் ஆகக் குறைந்தது 5 வருடங்களாவது படவரை அறிஞராகக் கடமையாற்றிய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது.**—விண்ணப்ப முடிவுத்திகதியன்று 22 முதல் 35 வயதுவரை. அரசாங்க/யாக்கச் சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயது மேலெல்லை அமைவுடையதன்று.

**வேதனம்.**—சகலமுமுட்பட மாதமொன்றிற்கு :

ரூபா 570 — 9 × 20 + 6 × 25 — ரூபா 900

உயர்ந்த தகைமையும், அனுபவமுமுள்ள விண்ணப்பகாரர் மேற்குறித்த வேதன அளவுத்திட்டத்தில், அவர்தம் தகுதிக்கேற்ற வேதனநிலையில் நியமனமளிக்கப்பெறலாம்.

**கட்புலத் துணை தொழில் நுட்பவலர் (மின்விசை உபகரணம்) பதவி தரம் I**

**தகுதியும், அனுபவமும் :**

(1) சி. பா. த. ப., க பொ. த. (சாதாரணதரப்) பரீட்சையில் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தி. ;

(2) செவிப்புல, கட்புல பதிவுநாடா உபகரணம், புரொஜெக்டர் போன்ற கட்புல துணைச் சாதனம் அடங்கலாக, மின்விசை உபகரணங்களைப்பேணுவதிலும், பராமரித்தலிலும் 5 வருடகால அனுபவம். இயங்கு நிழற்படக்கருவியை இயக்கும் திறன் ஒரு மேலதிகத் தகுதியாகக் கணிக்கப்படும் ;

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி தேவையான போது வெளிக்களத்தில் கடமையாற்றும்படி கேட்கப்படுவார் ;

கமத்தொழில் பற்றிய தேர்ச்சியும், வெளிக்களத்தில் கடமையாற்றிய அனுபவமும் மேலதிகத் தகைமைகளாகக் கணிக்கப்படும்.

**வயது.**—விண்ணப்ப முடிவுத்திகதியன்று 35 முதல் 25 வயதுவரை. அரசாங்க/யாக்கச் சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயது மேலெல்லை அமைவுடையதன்று.

**வேதனம்.**—சகலமுமுட்பட மாதமொன்றிற்கு :

ரூபா 350 — 10 × 15 + 5 × 20 — ரூபா 600

உயர்ந்த தகைமையும், அனுபவமுமுள்ள விண்ணப்பகாரர் மேற்குறித்த வேதன அளவுத்திட்டத்தில், அவர்தம் தகுதிக்கேற்ற வேதன நிலையில் நியமனமளிக்கப்பெறலாம்.

**கட்புலத் துணை தொழில் நுட்பவலர் (நிழற்பட உபகரணம்) பதவி தரம் II**

**தகுதியும், அனுபவமும் :**

(1) சி. பா. த. ப., க. பொ. த. (சாதாரணதரப்) பரீட்சையில் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தி ;

(2) 3 வருடகாலம் முழுநேர நிழற்படப்பிடிப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த அனுபவமும், எல்லா வித நிழற்படக்கருவிகளையும் இயக்கும் திறனும் ;

மின்னியக்க நிழற்படவியல், மின்னியக்கச் சலனப்பட உபகரணம், சிலைட் தயாரித்தல், கண்காட்சிக்கான நிழற்படங்கள் தயாரித்தல் போன்றவற்றில் அனுபவம் மேலதிகத் தகுதியாகக் கணிக்கப்படும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி, தேவையானபோது வெளிக்களத்தில் கடமையாற்றும்படி கேட்கப்படுவார்.

கமத்தொழில் பற்றிய தேர்ச்சியும், வெளிக்களத்தில் கடமையாற்றிய அனுபவமும் மேலதிகத் தகைமைகளாகக் கணிக்கப்படும்.

**வயது.**—விண்ணப்ப முடிவுத்திகதியன்று 25 முதல் 35 வயதுவரை, அரசாங்க/யாக்கச் சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயது மேலெல்லை அமைவுடையதன்று.

**வேதனம்.**—சகலமுமுட்பட மாதமொன்றுக்கு :

ரூபா 275 — 7 × 10 + 7 × 15 — ரூபா 450.

உயர்ந்த தகைமையும், அனுபவமுமுள்ள விண்ணப்பகாரர் மேற்குறித்த வேதன அளவுத்திட்டத்தில், அவர்தம் தகுதிக்கேற்ற வேதன நிலையில் நியமனமளிக்கப்பெறலாம்.

2. **சேவை நிபந்தனைகள்.**—தெரிவு செய்யப்படும் விண்ணப்பக்காரர்கள் :

(அ) 2 ஆண்டுக்காலத்திற்கு தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவர். அரசாங்கத் திணைக்களங்களில்/யாக்கங்களில்/நிலையங்களில் உள்ள நிரந்தரப் பணியாளர்கள் ஓராண்டு காலத்திற்குப் பதில் கடமையாற்றும் நிலையில் நியமிக்கப்படுவர்.

(ஆ) 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரச கரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு வழக்கிலுள்ள அல்லது எதிர் காலத்தில் புகுத்தப்படவுள்ள சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமையுமாறு வேண்டப்படுவர்.

(இ) சரிநேர் அலுவலர்கள் போன்ற வெளிநாட்டு நிபுணர்களோடு கடமையாற்றக் கேட்கப்படுவதோடு, ஒன்றுகக் கூட்டிணைந்து கருமம் ஆற்றக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஈ) தீவின் எப்பகுதிக்கும், வெளிக்கள கடமையாற்ற அழைக்கப்படுவர்.

(உ) தொழிலாளர் சேமலாப நிதியத்திற்குப் பங்குத் தொகையுதவுமாறும் நடைமுறையிலுள்ள நிலையத்தின் சகல விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் அல்லது 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கமநல; ஆராய்ச்சி, பயிற்சி நிலையச்சட்டத்தின் நியதிகளுக்கிணங்க எதிர்காலத்தில் செய்யப்படவுள்ள விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது, இரண்டுக்கும் அமையுமாறு வேண்டப்படுவர்.

3. பொது நிபந்தனைகள் :

(1) விண்ணப்புக்காரர்கள் தங்களுடைய விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் படிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ;

(ஆ) தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து பெற்ற இரண்டு நற்சான்றிதழ்கள். இதில் ஒன்று கல்விநிலையத்தின் தலைவர், அல்லது கல்லூரி போதனாசிரியர், அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும் ;

(இ) ஆகவுயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியெய்திய ஆகவுயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

2. விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இந்த அறிவிப்பின் தேவைகளுக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மூலச் சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது, அதைச் செய்யத்தவறும் விண்ணப்பகாரர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

3. விண்ணப்பகாரர்கள் கொழும்பில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு வேண்டப்படுவர். பிரயாணச் செலவோ ஏனைய செலவுகளோ கொடுக்கப்படமாட்டா.

4. ஒவ்வொரு விண்ணப்பகாரரும் சிறந்த ஒழுக்கமும் உடனலமும் உடையவரென்பதற்குத் திருத்திகரமான சான்றை வழங்குதல் வேண்டும்.

5. ஏலவே அரசாங்க சேவையிலுள்ளவர்களைத் தவிர்ந்த ஏனைய நியமிப்புப் பெறுபவர்கள் இத்தீவின் எப்பாகத்திலும் சேவை செய்வதற்கான தங்களுடைய உடற்றகுதியைப் பற்றி அரசாங்க மருத்துவ உத்தியோகத்தரொருவரினால் நடத்தப்படும் மருத்துவப் பரீட்சையில் சித்தியெய்துமாறு கேட்கப்படுவர்.

6. அரசாங்கத் திணைக்களங்களில்/யாக்கங்களில்/நிலையங்களில் சேவை செய்யும் விண்ணப்பகாரர்கள் தத்தம் நிலையத்தின் தலைவர்களுக்கூடாகத் தாம் நியமிப்புக்காகத் தெரிவு செய்யப்படின் விடுவிக்கப்படுவரார்கள் என்று கூறப்பட்டு அனுப்பும் விண்ணப்பங்கள் மாத்திரமே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

7. ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள், ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக வெவ்வேறு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தபால் உறையில் இடது மேல் மூலையில் தரப்படவேண்டும்.

33, எலிபாங்க் வீதி,
கொழும்பு 5.

பணிப்பாளர்,
கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிலையம்.

11-400—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

**திட்டவமைப்பு, பொருளாதார அலுவல் அமைச்சு**

**அவுஸ்திரேலிய அரசாங்கம்—ஏற்றுமதி அபிவிருத்தி, உணவுத் தொழினுட்பவியல் பயிற்சித் திட்டம்**

அவுஸ்திரேலிய அரசாங்கம் கொழும்புத் திட்டத்தின் கீழ் ஏற்றுமதி அபிவிருத்தியில் பயிற்சி அளிப்பதற்கு இரண்டு புலமைப் பரிசில்களையும் உணவுத் தொழினுட்பவியலில் பயிற்சி அளிப்பதற்கு ஒரு புலமைப் பரிசிலையும் வழங்குவதற்கு முன்வந்துள்ளது. அப்புலமைப் பரிசில்கள் தனியார் துறையில் உள்ள ஆளணியினருக்கு வழங்கப்படுவதன் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அவுஸ்திரேலிய கைத்தொழிலிலும் வர்த்தகத்திலும் அபிவிருத்தி செய்யப்பட்ட வெளிநாட்டு வியாபார மேம்பாட்டுச் செய்முறைகளில் நிறைவேற்றுநிலை வணிகர்களுக்குப் பயிற்சியளிப்பதே ஏற்றுமதி அபிவிருத்திப் பயிற்சித் திட்டத்தின் நோக்கமாகும். இதில் பங்குகொள்பவர்கள் அவுஸ்திரேலிய செய்முறைகளை இலங்கையில் உள்ள சூழ்நிலைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்றதாக மாற்றியமைப்பது அவசியமெனக் காண்பர். உணவுத் தொழினுட்பவியல் பயிற்சித் திட்டம் உணவு பேணல், சந்தைப்படுத்தல் செய்முறைகளைப் பயனுள்ள வகையில் உபயோகிக்கும் முக்கியத்துவத்தை அதில் பங்கு கொள்பவர்கள் நன்கு அறிந்து கொள்வதன் நோக்கில் அமைக்கப்பட்டுள்ளது.

**தகவுத்திறன்**

**ஏற்றுமதி அபிவிருத்தி**

ஏற்றுமதி அபிவிருத்திப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கும் அபேட்சகர்கள் தனியார் வர்த்தக நிறுவனங்களில் நிறைவேற்று நிலை வணிகர்களாகவும் ஏற்றுமதிச் செய்முறை அமிசங்களில் அக்கறையுள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் ஏற்றுமதி நடைமுறைகள், விற்பனைச் செய்னுட்பங்களில் அறிவு பெற்று அவற்றைப் பிரயோகிக்கும் பதவிகளில் அமர்த்தப்பட்டும் இருத்தல் வேண்டும்.

**உணவுத் தொழினுட்பவியல்**

உணவுத் தொழினுட்பவியல் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கும் அபேட்சகர்கள் உணவுத் தொழினுட்பவியற்றுறையில் அனுபவமுள்ள மத்தியநிலை ஆளணியினராகவும் உணவுத் தொழினுட்பவியலுடன் தொடர்புள்ள ஒரு துறையில்—நுண்ணுயிரியல் உட்பட்ட ஆய்வு விரும்பத்தக்கது—பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

பயிற்சித் திட்டங்களுக்கு விண்ணப்பிக்கும் அபேட்சகர்கள் இலங்கைப் பிரஜைகளாகவும் ஆங்கிலம் நன்கு தெரிந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

**கால அளவு**

ஏற்றுமதி அபிவிருத்திப் புலமைப்பரிசிலுக்கான கால அளவு 5 வாரங்கள், உணவுத் தொழினுட்பவியல் புலமைப்பரிசிலுக்கான கால அளவு 11 வாரங்கள்.

**பரிசில் நியதிகள்**

(அ) புலமைப்பரிசிலுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்லது அவர்களின் பணிகொள்வோர் அரசாங்க வருமானமாக 6,142 ரூபா கொண்ட தொகையினைச் செலுத்துமாறு வேண்டப்படுவர். புறநடையான சூழ்நிலைகளில் இத்தேவையிலிருந்து விலக்களிப்பது ஆலோசிக்கப்படலாம்.

(ஆ) புலமைப்பரிசில் பின்வரும் நன்மைகளைக் கொண்டுள்ளது :—

(i) அவுஸ்திரேலியாவுக்குச் சென்று திரும்புவதற்குச் சிக்கன வகுப்பு விமானப் பயணச்சீட்டு.

(ii) அவுஸ்திரேலியாவுக்குள் கல்வி நிகழ்ச்சிமுறையினால் வேண்டப்படும் பயணத்துக்கான சலார்கள்.

(iii) உடைக்கான படி.

(iv) உணவுச் செலவு போன்ற செலவினங்களுக்கு வாழ்க்கைப்படி.

**மருத்துவச் சோதனை**

அவுஸ்திரேலியாவில் பயிற்சி நெறியை மேற்கொள்வதற்கு உடற்றகுதியும் உளத்தகுதியும் கண்டறிவதற்காக நடாத்தப்படும் மருத்துவச் சோதனையொன்றில் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் சித்தியடையுமாறு வேண்டப்படுவர்.

**பொது**

இலங்கை அதிகாரிகளால் நியமனம் செய்யப்படுவதனால் தமது விடயம் பரிசில் வழங்கப்படுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக எந்த விண்ணப்பகாரரும் கருதலாகாது. ஏற்றுக்கொள்வது பரிசில் வழங்கும் முகாமையின் தற்றுணிபில் முழுமையாகத் தங்கியுள்ளது.

முன்பு புலமைப்பரிசில், கல்விச் சுற்றுலா, பயிற்சி, கருத்தரங்குகள் முதலியவற்றின் பொருட்டு வெளிநாடுகளுக்குச் சென்றிராத விண்ணப்பகாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பயிற்சியாளர்கள் தமது பயிற்சி நெறிமுறை பூர்த்தியானதும் தாம் வெளிநாட்டில் பெற்ற பயிற்சி விரிவான அறிக்கையொன்றினை இரண்டு பிரதிகளில் திட்டவமைப்பு, பொருளாதார அலுவல் அமைச்சிடம் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுவர்.

இவ்விளம்பரத்திற்குப் பதிலாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள், கொழும்பு 1, இராணி வீதி, சிலின்கோ ஹவுஸ் கட்டடம், இரண்டாம் மாடி 69—2/1 ஆம் இலக்கத்திலுள்ள திட்டவமைப்பு, பொருளாதார அலுவல் அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு, அம்முகவரியிலுள்ள இவ்வலுவலகத்திற் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் படிவங்களில் அனுப்பப்படல் வேண்டும். எல்லா விண்ணப்பங்களும் (விண்ணப்பகாரர்கள் சொந்தத் தொழில் செய்யாதவிடத்து) வேலை கொள்வோரின் மூலம் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பகாரர்கள், கொழும்பில் ஒரு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு கேட்கப்படலாம். இந்நேர்முகப் பரீட்சை சம்பந்தமான பிரயாண அல்லது வேறு செலவு எதுவும் கொடுக்கப்படமாட்டாது.

ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் ரூபா 10 முத்திரைக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் தபாற் தலை ஒட்டுவதற்கென விடப்பட்டுள்ள கூட்டில் ரூபா 10 பெறுமதிக்குத் தபாற் தலைகள் ஒட்டி, விண்ணப்பகாரரின் கையொப்பத்தால் அழிக்கப்படல் வேண்டும். எச்சூழ்நிலையிலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான கடைசித் திகதி 1973 நொவெம்பர் 19 ஆகும்.

செயலாளர்,
திட்டவமைப்பு, பொருளாதார அலுவல் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆு ஒக்டோபர் மீ 31 ந் உ.

11–380—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

**களுத்துறை பெரும்பகுதியில் மகுற பிறப்பு இறப்புப் பிரிவிற்கும், பஸ்துன் கோறளை கிழக்கு விவாக (பொது) பிரிவிற்கும் பதிவுகாரர் பதவி**

மகுற பிறப்பு, இறப்பு பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதுக்குக் குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிற தராதரங்கள் நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரி, கிராம சேவையாளர், உள்ளூராட்சிச் சபை, தபால் அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், பொலிஸ், சனசமூக, கூட்டுறவுத்தாபன, பிரசித்த வியாபார நிலையங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரத்தில் நிரப்புவதோடு 1973 ம் ஆண்டு கார்த்திகை மாதம் முப்பதாம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

எ. ட. வி. குணசேகர,
பெரும்பகுதிப் பதிவுகாரருக்காக.

பெரும்பகுதிப் பதிவுகாரர் காரியாலயம்,
களுத்துறை,
1973.10.26.

11–270—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**இலக்கம், எஸ். எச். 3/73.**

**பொலிஸ் திணைக்களம்**

பொலிஸ் கொஸ்தாப்புச் சாரதிகள் பதவிக்கு ஆட்சேர்ப்பு

மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பங்கள் கோரி 7.9.1973 ஆந் திகதிய 76 ஆம் இலக்க இலங்கைக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு கவனம் கோரப்படுகின்றது.

பந்தி 1 :—" பொலிஸ் கொஸ்தாப்புச் சாரதிகள் பதவிக்கு ஆட்சேர்ப்பு பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன " என்பது " பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் கொஸ்தாப்புச் சாரதிகள் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன " என திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

பந்தி 8. சேவை நிபந்தனைகள் :—" தபானக் கோவை " என்பது " தாபனக் கோவை " என திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவம்......

கேள்வி 6 : " ———— ஆம் திகதியில் வயது " என்பது " 20.10.73 ஆம் திகதியில் வயது " என் வாசிக்கப்படல் வேண்டும்.

டி. எஸ். இ. பி. ஆர். சேனநாயக்க,
பொலிஸ் அதிபர்.

பொலிஸ் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 1,
18 செப்தெம்பர் 1973.

11–244—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஒற்றோபர் | 5.10.73 | வெள்ளி | 25.9.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| | 12.10.73 | வெள்ளி | 3.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 19.10.73 | வெள்ளி | 10.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 26.10.73 | வெள்ளி | 17.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| நவெம்பர் | 2.11.73 | வெள்ளி | 24 10.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 9.11.73 | வெள்ளி | 31.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 16.11.73 | வெள்ளி | 7.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 23.11.73 | வெள்ளி | 14.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 30.11.73 | வெள்ளி | 21.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| திசெம்பர் | 7.12.73 | வெள்ளி | 28.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.12.73 | வெள்ளி | 5.12.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.12.73 | வெள்ளி | 12.12.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 28.12.73 | வெள்ளி | 19.12.73 | புதன் | ந.ப. 12 00 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1973 ம் ஆண்டு ஒகத்து மீ 18 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.